Dr. (Mrs) S. Uthayarasa
B.A (Hons), M.Phil., Ph.D
Senior Lecturer in Geography
Department of Geography
University of Jaffna
Jaffna Sri Lanka.

உலகப் பொதுமறை

# வள்ளுவம்

தொகுதி–1




தொகுப்பாசிரியர்

**உடையார்கோவில் குணா**

பதிப்பாசிரியர்கள்

முனைவர் **அ.ஜெஸின் பிரான்சிஸ்**

முனைவர் **க.சுஜாதா**

முனைவர் **க.இந்துமதி**

முனைவர் **சி.சங்கீதா**

**செ.தமிழரசி**

**உலகத் திருக்குறள் மாநாடு - 2019**
**கோலாலம்பூர் – மலேசியா.**

உள்ளத்தனையது உயர்வு

தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு-10

# நூல் விவரம்


தலைப்பு : உலகப் பொதுமறை வள்ளுவம் (தொகுதி–1)
(உலகத் திருக்குறள் மாநாட்டு கருத்தரங்கம்)

தொகுப்பாசிரியர் : **உடையார்கோவில் குணா.**

துணை
பதிப்பாசிரியர்கள் : முனைவர் **அ.ஜெஸின் பிரான்சிஸ்**
முனைவர் **க.சுஜாதா**
முனைவர் **க.இந்துமதி**
முனைவர் **சி.சங்கீதா**
**செ.தமிழரசி**

மொழி : தமிழ், ஆங்கிலம்

உரிமை–வெளியீடு : தமிழ்த்தாய் அறக்கட்டளை
மாரியம்மன் கோவில்,
தஞ்சாவூர்–613 501.
தொலைபேசி: 04362268167
கைபேசி: 9443938797, 7530002454.

அளவு : டெம்மி

பக்கங்கள் : 318

விலை : ரூ.250/–

ISBN : **978-81-909877-5-2**

நூல் வடிவமைப்பு: பரிதி பதிப்பகம்,
சோலையார்பேட்டை.
வேலூர் மாவட்டம்.
கைபேசி: 8098908840, 7200693200

# வள்ளுவர் வழிகாட்டும் வாழ்க்கை அல்லது வாழ்வாதார நிலை

13

திருமதி சுபாஜினி உதயராசா,

திருவள்ளுவரால் இயற்றப்பட்ட திருக்குறளானது ஒரு நீதி நூல் மட்டுமல்ல. அது ஒரு வாழ்வியலுக்கு வழிகாட்டும் சிறந்த நூலும் ஆகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதனுக்காக மட்டுமல்ல இருபத்தோராம் நூற்றாண்டின் புதிய தலைமுறையினர்க்கும் வழிகாட்டக் கூடிய ஒரு புரட்சி நூலாகும். திருவள்ளுவர் சென்ற காலத்தின் பழ திலாத்திறனையும் எதிர்காலத்தின் சிறப்பையும் மனதில் கொண்டு திருக்குறளில் மனித வாழ்க்கை நெறியை வடிவமைத்துள்ளார். அதாவது மனித வாழ்க்கையிலுள்ள மூன்று நிலைகளை அறம், பொருள், இன்பம் என்ற மூன்று வடிவங்களில் வகுத்துக் கூறியுள்ளார். இதனை திருக்குறளில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பெரிய பகுதிகளாக வகுத்து அமைத்துள்ளார். அதனை மேலும் பத்து இயல்களாகப் பிரித்து இப்பத்து இயல்களையும் விரிவாக நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களாக்கி உள்ளார். ஒவ்வொரு அதிகாரத்திலும் சொல்ல வந்த கருத்துக்களைப் பத்துக் குறட்பாக்களிலே உள்ளடக்கியுள்ளார். குறட்பாக்கள் குறுகியதொரு வடிவத்திலே ஈரடியால் மிக நுட்பமாக விடயங்களை விளக்கியுள்ளது. திருவள்ளவர் திருக்குறளிலே மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத நெறிகளை பல்வேறு வடிவங்களில் எடுத்துக்காட்டியுள்ளார். இந்த வகையில் இக்கட்டுரையானது வள்ளுவர் வழிகாட்டும் வாழ்க்கை நெறி அல்லது வாழ்வாதார நிலை பற்றித் தெளிவாக ஆராய்கின்றது.

வள்ளுவர் வழிகாட்டும் வாழ்க்கை நெறிகளை அல்லது வாழ்வாதார நிலைகளை பல்வேறு பகுதிகளாக திருக்குறளில் அவதானிக்கலாம். உலகத்தில் இடம்பெறும் செயல்கள் யாவற்றையும் வர்த்தக நோக்கில் இட்டுச் செல்லும் உலக மயமாக்கல் மனித வாழ்வியலின் அடிப்படைகளை இல்லாது ஒழிக்கும் அளவிற்கும், சிதைவடையச் செய்யும் அளவிற்கும்

அமைவதனால் மனித சமூகத்தின் பெரும் பகுதி இயந்திரமான வாழ்வியலைத் தோற்றுவித்துள்ளது. திருவள்ளுவர் நடைமுறை அறியாத தத்துவம் பயனற்றது என்பதை உணர்ந்து தாழ்வைத் துடைத்து வாழ்வில் நிறைவு காணும் செயலைச் சிந்தித்துச் செயலுக்கு வழிகாட்டும் சிறப்புடைய ஞான நூலான திருக்குறளில் பல்வேறு வாழ்க்கை நெறிகளையும் வாழ்வாதார செயற்பாடுகளாக தந்துள்ளார்.

அவற்றுள் இல்லறம், அன்பு, உறவு நிலை, மக்கட்பேறு, விருந்தோம்பல், ஈகை, கல்வி, ஒழுக்கம், அடக்கம், பொறாமை இல்லாதிருத்தல், இன்சொல் பேசுதல், செய்நன்றி மறவாமை, வாழ்க்கைக்கு பொருளின் அவசியம், புகழ்பெற வாழ்தல், வாழ்க்கைக்கு அவசியமான தொழில் முறைகள், வர்த்தக நடவடிக்கைகள் போன்றன முக்கியமாகும். இவை யாவும் ஒரு மனிதனின் வாழ்க்கையில் காணப்படும் நெறிமுறைகளாகும் 'இல்லறமல்லது நல்லறமன்று' என்ற ஔவையார் வாக்கினால் அறங்களில் எல்லாம் சிறந்த அறம் இல்லறம் என்பது விளங்கும். தூய அன்புடைய ஆணும், பெண்ணும் கருத்தொருமித்துச் சேர்ந்து வாழும் வாழ்க்கையே இல்லறம். இல்லற வாழ்வில் உயர்வு தாழ்விற்கு இடமில்லை. மன ஒற்றுமையே முதன்மை பெறுகின்றது. இதனை திருவள்ளுவர்,

**'அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை அதுவும்**
**பிறன் பழிப்ப தில்லையாயின் நன்று' (குறள் 49)**

எனக் கூறியுள்ளார். அதாவது அறன் என்று சொல்லப்படுவது இல்லறம் என்பது விளங்கும். இவ் இல்லறத்தில் பொருந்தி வாழும் இயல்பினால் சிறப்புற வாழ்பவன் தேவருள் வைத்து மதிக்கப்படுவான் என்பதை

**'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்' (குறள் 50)**

என குறிப்பிட்டுள்ளார்.

இல்லறம் என்னும் அறத்தை செய்பவன் 'இல்லாழ்வான்' எனும் சிறப்புப் பெயயரால் குறிப்பிட்டள்ளார். இல்வாழ்க்கை என்னும் அதிகாரத்திலே இரண்டு குறட்பாக்களில் அவனுடைய

என்ற குறட்பாவில் கூறியுள்ளார். பிறருடன் இன்சொற்களைப் பேசி மகிழ்வுடன் வாழ்தல் வேண்டும்.

**'இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனியிருப்பக் காய் கவர்ந்தற்று' (குறள் 100)**

பிறப்பால் எல்லா உயிர்களும் சமம் என்பதை
**'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்' (குறள் 972)**
என்ற குறள் அறிவுறுத்துகின்றது.

இல்லறத்தில் இணைந்து அன்புப் பிணைப்புடன் வாழ்வோர் தம் வாழ்வு அவர்கள் ஈன்றெடுக்கும் மக்கட் செல்வங்களால் தான் முழுமை அடையும். இந்த உறவு தான் தலைமுறை தோறும் தொடர்ந்து வரும் உறவாகும். ஒருவர் எத்தகைய செல்வம் படைத்தவராயினும் மக்கட்பேறு இல்லாதோர் வாழ்க்கை பயனற்றதே என்பதை

**'பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த**
**மக்கட்பே றல்ல பிற' (குறள் 61)**

**'மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்**
**சொற்கேட்டல் இன்பம் செவிக்கு' ( குறள் 65)**

ஆகிய குறட்பாக்கள் மூலம் மக்கள் பேற்றின் சிறப்பைக் குறிப்பிடுகின்றார்.

தமிழ் மக்களின் தலைசிறந்த பண்புகளுள் ஒன்று விருந்தோம்பல், விருந்தினரை வரவேற்று உபசரித்துப் போற்றும் பண்பு தொன்று தொட்டு வழங்கி வருவது, இல்வாழ்க்கையின் இனிய பயனாகக் கருதப்படுகிறது. விருந்தோம்பலின் சிறப்புக்களை எல்லாம் வள்ளுவர் 'விருந்தோம்பல்' என்ற அதிகாரத்தில் காட்டியுள்ளார்.

**'இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு' (குறள் 81)**

**'செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத் தவர்க்கு' (குறள் 86)**

ஆகிய குறட்பாக்களில் காட்டியுள்ளார்.

வீட்டிலிருந்து பொருட்களைக் காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் போற்றி உதவி செய்யும் பொருட்டே ஆகும்

பொருள் இல்லாதவர்க்குப் பொருளைக் கொடுப்பதே ஈகை ஆகும். ஏனையோருக்குக் கொடுப்பதெல்லாம் பலனை எதிர்பார்த்துக் கொடுப்பதாகும். ஈகை என்ற சொல்லின் சிறப்பான பொருளை பின்வரும் குறட்பா மூலம் வள்ளுவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

**'வறியவர்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்**
**குறியெதிர்ப்பை நீர துடைத்து' (குறள் 220)**

ஒழுக்கம் உயிரைக் காட்டிலும் பாகாக்கப்பட வேண்டியது. அதுவே சிறப்பைத்தரும். இதனை வள்ளுவர்,

**'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப்படும்'**

என்ற குறட்பாவில் விளக்கி உள்ளார். ஒழுக்கம் உடைமை குடிமை எனப்படும், ஒழுக்கத்தில் இருந்து தவறினால் இழிந்த பிறப்பாகக் கருதப்படும். இதனை பின்வரும் குறட்பாவில் விளக்கியுள்ளார்.

**'ஓழக்கம் உடைமை குடிமை இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும்' (குறள் 133)**

வேட்டையாடுதல், விவசாயம் செய்தல், ஆசிரியர் பணி, இறைச்சி விற்றல், தச்சுத்தொழில்,சிகைஅலங்காரத் தொழில், பொற்கொல்லர் தொழில், கூத்தாடுதல் போன்ற தொழில்களை வள்ளுவர் மக்களின் வாழ்வாதாரத் தொழில்களாகக் குறிப்பிட்டுள்ளார்.

**'தவம் மறைந்து அல்லவை செய்தல் புதல் மறைத்து**
**வேட்டுவன் புள் சிமிழ்த் தற்று' (குறள் 274)**

என வேட்டையாடுதல் பற்றியும்,

**'ஏரின் உழா ஆர் உழவர் புயலென்னும்**
**வாரி வளங்குன்றிக் கால்' (குறள் 14)**

என விவசாயத்தொழில் பற்றியும்,

**'மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்**
**பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்' (குறள் 134)**

## முடிவுரை:

இவ்வாறாக வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தமிழ் மறையாம் திருக்குறளில் பல்வேறு கோணங்களில் வாழ்க்கை நெறிகளையும், வாழ்வாதார நிலைகளையும் தெளிவுபடுத்தி உள்ளார். குறிப்பாக இல்லறம் அல்லது இல்வாழ்க்கை, அன்பு, உறவு நிலை, மக்கட்பேறு, விருந்தோம்பல், இனியவை கூறல், ஒழுக்கம், கற்பு, போன்ற வாழ்க்கைக்கு வழிகாட்டும் நெறிகளையும், வாழ்க்கைக்கு அவசியமான தொழில் முறைகள், வர்த்தக நடவடிக்கைகள் போன்றவற்றை ஈரடிகளைக் கொண்ட குறட்பாக்களின் மூலம் எடுத்து விளக்கியுள்ளார். குறிப்பாக தமிழர் மரபான வாழ்வியல் நெறிகளை அதிகளவில் வகுத்துக் காட்டும் திருவள்ளுவரின் திருக்குறளைப் பல்வேறு நாட்டவரும் படிக்கும் வாய்ப்பு தற்போது ஏற்பட்டுள்ளது. எனவே இன்று மட்டுமல்ல; இனிவரப் போகும் காலங்களிலும் திருவள்ளுவர் காட்டிய வாழ்க்கை நெறியில் தவறாது வாழ்வாதார நிலைகளினூடாக வாழ வேண்டும் என்பதே இக்கட்டுரை ஆசிரியரின் விருப்பம் ஆகும்.

**திருமதி சுபாஜினி உதயராசா,**
சிரேஸ்ட விரிவுரையாளர் தரம் 1,
தலைவர்,
புவியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.
usubageo@gmail.com